ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2147/47 - 2019 ඔක්තෝබර් මස 29 වැනි අඟහරුවාදා - 2019.10.29

*2147/47 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 29 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 104/44* (V)

**(87 ஆம் அத்தியாயமான) நம்பிக்கைப் பொறுப்புக்கள் கட்டளைச் சட்டம்**

114 ஆம் பிரிவின் கீழான கட்டளை

"இலங்கையிலுள்ள இயேசு சபையின் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள்" இனது நம்பிக்கைப் பொறுப்பாளர்களான, அதாவது,-

1. வணக்கத்துக்குரிய அருட்தந்தை டெக்ஸ்டெர் பிரெட்ரிக் கிரே,
2. வணக்கத்துக்குரிய அருட்தந்தை நொயெல் பீலிக்ஸ் அன்டன் பீரிஸ்,
3. வணக்கத்துக்குரிய அருட்தந்தை ஜோர்ஜ் அந்தோனி பெர்ணாந்து,
4. வணக்கத்துக்குரிய அருட்தந்தை க்ளெமென்ட் ரஞ்சன் ஜயமன்ன,

ஆகியோர் (87 ஆம் அத்தியாயமான) நம்பிக்கைப் பொறுப்புக்கள் கட்டளைச் சட்டத்தின் 114 ஆம் பிரிவின் கீழ் அவர்கள் கூட்டிணைக்கப்படுவதற்காக நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சருக்கு விண்ணப்பித்துள்ளனராதலால் ;



*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

ஆகவே இப்பொழுது, மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் தலதா அதுகோரள ஆகிய நான், சொல்லப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பாளர்களைக் கூட்டிணைப்பதற்கு இக்கட்டளை மூலம் அதிகாரமளிக்கின்றேன் என்பதுடன், பின்வருமாறும் பணித்து வெளிப்படுத்துகின்றேன்-

(அ) கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு தாரிணி பிரகாஷி டயஸ் செனரத் குணசேகர அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2019, யூன் 25 ஆந் திகதிய 486 ஆம் இலக்கத்தைக் கொண்ட நம்பிக்கைப் பொறுப்பு உறுதியின்கீழ் அப்போதைக்கு முறையாக நியமிக்கப்பட்ட மேலே பெயர் குறிப்பிடப்பட்ட சொல்லப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பின் நம்பிக்கைப் பொறுப்பாளர்களும் அவர்களின் அடுத்துறுபவர்களும் “இலங்கையிலுள்ள இயேசு சபையின் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள்” என்ற பெயர் மகுடத்தின்கீழ் இடையறா வழியுரிமையையும் பொது இலச்சினையையும் கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டுமென்றும் ;

(ஆ) சொல்லப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சொல்லப்பட்ட பெயர் மகுடத்தின்கீழ் சொல்லப்பட்ட நம்பிக்கைப் பொறுப்புச் சார்பில் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைக் கொள்வனவு செய்யலாம், பெறலாம், வைத்திருக்கலாம், கடனாக எடுக்கலாம் அல்லது வேறுவகையாகக் கொள்ளலாம், விற்பனை செய்யலாம், கொடுத்து மாற்றலாம், ஈடுவைக்கலாம், அடைமானம் வைக்கலாம், குத்தகைக்குக் கொடுக்கலாம் அல்லது வேறு வகையில் கையுதிர்க்கலாமென்றும் ; அத்துடன்

(இ) சொல்லப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பாளர்கள், சொல்லப்பட்ட பெயரினாலும் மகுடத்தினாலும், சொல்லப்பட்ட நம்பிக்கைப் பொறுப்புத் தொடர்பாக எழுகின்ற எல்லா வழக்குகளிலும் வழக்கு நடவடிக்கைகளிலும் இலங்கையிலுள்ள அல்லது வேறெங்கேனும் உள்ள ஏதேனும் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுப்பதற்கும் வழக்குத் தொடுக்கப்படுவதற்கும், விடையளிப்பதற்கும் விடையளிக்கப்படுவதற்கும், எதிர்வாதிடுவதற்கும் எதிர்வாதிடப்படுவதற்கும் சட்டத்தில் இயன்றவர்களாகவும் தகுதி வாய்ந்தவர்களாகவும் இருத்தல் வேண்டுமென்றும்.

இக்கட்டளையானது இல்லாதொழிக்கப்படலாம், அல்லது அவசியமென எனக்குத் தோன்றக்கூடியவாறான அத்தகைய முறையில் காலத்திற்குக்காலம் வேறுபடுத்தப்படலாம் அல்லது திருத்தப்படலாம்.

தலதா அதுகோரள,
நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர்.

கொழும்பு,
2019, ஒற்றோபர் 22.

11-1015/1

---

ச. வ. பி. 104/44 (V)

**(87 ஆம் அத்தியாயமான) நம்பிக்கைப் பொறுப்புக்கள் கட்டளைச் சட்டம்**

114 ஆம் பிரிவின் கீழான கட்டளை

நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் தலதா அதுகோரள ஆகிய நான், “காலி சமயப் பரப்புக் குழுவிலுள்ளஇயேசு சபையின் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள்” இனைக் கூட்டிணைக்கின்ற 1960, ஏப்பிறல் 1 ஆந் திகதிய 12,099 ஆம் இலக்க, இலங்கை அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், (87 ஆம் அத்தியாயமான) நம்பிக்கைப் பொறுப்புக்கள் கட்டளைச் சட்டத்தின் 114 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்டதுமான கட்டளையை இக்கட்டளை மூலம் இல்லாதொழிக்கின்றேன்.

தலதா அதுகோரள,
நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர்.

கொழும்பு,
2019, ஒற்றோபர் 22.

11-1015/2

*ச. வ. பி. 104/44* (V)

**(87 ஆம் அத்தியாயமான) நம்பிக்கைப் பொறுப்புக்கள் கட்டளைச் சட்டம்**

*114 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் தலதா அதுகோரள ஆகிய நான், "திருகோணமலை மேற்றிராணிப் பிரிவிலுள்ள இயேசு சபையின் சுபீரியர் ரெகுலர்" இனைக் கூட்டிணைக்கின்ற 1960, மாச்ச 11 ஆந் திகதிய 12,077 ஆம் இலக்க, இலங்கை அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், (87 ஆம் அத்தியாயமான) நம்பிக்கைப் பொறுப்புக்கள் கட்டளைச் சட்டத்தின் 114 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்டதுமான கட்டளையை இக்கட்டளை மூலம் இல்லாதொழிக்கின்றேன்.*

*தலதா அதுகோரள,*
*நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர்.*

*கொழும்பு,*
*2019, ஒற்றோபர் 22.*

*11-1015/3*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.